**Kanton Bern**
**Canton de Berne**

# Basisstufe
# பற்றிய பெற்றோருக்கான தகவல்கள்
## Elterninformationen Tamilisch

**Bildungs- und Kulturdirektion**



# Basisstufe



## முக்கியமானவை சுருக்கமாக

Das Wichtigste in Kürze

பேர்ண் மாநிலத்தில் பிள்ளைகள் இரண்டு வருடங்கள் பாலர் பாடசாலை சென்று அதன் நிறைவில் ஆரம்பத் தரத்தின் முதலாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றனர். „Basisstufe“ எனும் கட்டமைப்பானது பாலர் பாடசாலையின் இரண்டு வருடங்கள் மற்றும் ஆரம்பத் தரத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடத்தை இணைத்ததாக அமைந்திருக்கும். Basisstufe வகுப்பில் நான்கு வயது தொடக்கம் எட்டு வயது வரையான பிள்ளைகள் ஒன்றுசேர்த்து கற்பிக்கப்படுவார்கள்.
பாடங்கள் பிள்ளைகளின் விருத்தி மற்றும் கற்கும் நிலைக்கு ஏற்றதாகவும் (ஆனால் அவர்களின் வயதுக்கு தகுந்தபடியாக அல்ல) மற்றும் வித்தியாசமான வயதுள்ளவர்கள் கலந்துள்ள கற்கும் குழுவாகவும் இடம்பெறும். விளையாட்டு நிகழ்வுகளிலிருந்து செயல்முறைகளைத் திட்டமிட்டு கற்றுக்கொள்ளும் வழிவகைகள் திறமையான முறையில் மேற்கொள்ளப்படும்.

Basisstufe ல் பிள்ளைகள் வழமையாக நான்கு வருடங்கள் தொடர்ந்து சென்று கற்கும் குறிக்கோளை அடைந்த பின்பு மூன்றாம் வருடத்தை முடித்தபின் ஆரம்பத் தரத்திலிருந்து மேலே செல்வார்கள். ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நிபந்தனைகள் மற்றும் அவர்கள் சொந்தமாக கற்றுக்கொள்ளும் முறைகள் போன்றவையால் Basisstufe செல்லும் காலம் மூன்று அல்லது ஐந்து வருடங்களாக அமைந்திருக்கும்.

Basisstufe யின் வகுப்பு, 18 தொடக்கம் 24 பிள்ளைகளைக் கொண்டதாகவும் இரண்டு ஆசிரியர்கள் சிலவேளைகளில் ஒன்றுசேர்ந்து கற்பிப்பதாகவும் அமைந்திருக்கும்.

## விருத்தியடைதல்- மற்றும் கற்பிப்பதை விளங்கிக் கொள்தல்

Entwicklungs- und Bildungsverständnis

பிள்ளைகள் விருத்தியடைதல் வித்தியாசமானதாக நடைபெறும். பிள்ளைகள் முதல் அடியை எடுத்து வைப்பது வித்தியாசமான காலத்திலும் அவர்கள் முதல் வார்த்தையைக் கதைப்பது வித்தியாசமான வயதிலுமாகும். வேறு செயற்பாடுகள் மற்றும் நிகழ்வுகளும் இவ்வாறாகவே நடைபெறும். Basisstufe ல் இவ்வாறான தனிப்பட்ட விருத்தி நிலை விசேடமாக கணக்கில் எடுக்கப்படுவதுடன், இதில் பாடங்கள், விளையாட்டு- மற்றும் கற்கும் வசதிகள் ஒவ்வொரு பிள்ளைகளதும் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவிதமாக அமைந்திருக்கும்.

## வயது வித்தியாசமானவர்கள் கலந்துள்ள கற்கும் குழு

Altersgemischte Lerngruppen

Basisstufe ல் நான்கு- தொடக்கம் எட்டு வயதான பிள்ளைகள் ஒன்றாக கற்பிக்கப்படுவார்கள். இங்கு பிள்ளைகள் வித்தியாசமான நிபந்தனைகள் மற்றும் திறமைகளுடன் வருகின்றார்கள், பாடங்கள் அவர்களது வயதுக்கு தகுந்தவாறு இல்லாமல், அவர்களின் அபிவிருத்தி, அவர்களின் விருப்பு வெறுப்புகள் மற்றும் கற்கும் வாய்புகளுக்கு ஏற்றதாக அமைந்திருக்கும். வித்தியாசமான வயதுள்ளவர்கள் கலந்துள்ள கற்கும் குழு வேறு பிள்ளைகளுடன் பொறுப்பு மிகுந்த விதத்தில் பழகும் ஒரு பெறுமதியான கற்கும் சூழலை  வழங்குகிறது. பிள்ளைகள் ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்ள முடிவதுடன், அவர்கள் இதனால் தமது சொந்த அறிவையும் தெரிந்தவற்றையும் ஆழமாக்கிக் கொள்ள முடிகின்றது.

## விளையாடுதல் மற்றும் கற்றுக்கொள்ளல்

Spielen und Lernen

Basisstufe ல் விளையாடும் நிகழ்வுகளிலிருந்து செயல்முறைகளை நடைமுறைப்படுத்தும் வழிகாட்டுதல்களை நன்றாகக் கற்றுக்கொள்வார்கள்: கற்றுக்கொள்ளும்போது விளையாடுவது, விளையாடும்போது கற்றுக்கொள்வதை ஈடுசெய்கிறது. இதன்மூலம் பிள்ளைகள், தமது தனிப்பட்ட விருத்திக்கு ஏற்ற விதத்திலும், உணர்வுகள், சமூக மற்றும் பாடசாலை நிலைக்கு ஏற்ற விதமாகவும் ஊக்குவிக்கப்படுவார்கள்.

## வாசித்தல், எழுதுதல், கணக்கிடல்

Lesen, Schreiben, Rechnen

வாசித்தல், எழுதுதல், கணக்கிடல் என்பவற்றை ஆரம்பிப்பது வயதாகியதாலோ அல்லது முதலாம் பாடசாலை வருடத்திற்கு ஏறிச்செல்வதற்கான தகுதியாகவோ கருதப்படாது, மாறாக பிள்ளைகளின் விருத்தியே ஆகும். Basisstufe கட்டுப்பாடுகள் அற்று இருப்பதால் பிள்ளைகள் அதற்கு விரும்பி ஆயத்தமாகும்போதே வாசித்தல், எழுதுதல் மற்றும் கணக்கிடல் என்பவற்றிற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. பிள்ளைகள் புதியனவற்றை அறிவதும் கற்பதில் மகிழ்வதும் இதன்போது தடுக்கப்படுவதில்லை, மாறாக ஊக்குவிக்கப்படுகின்றது. இந்த அடிப்படைத் தத்துவமே ஏனைய கற்பிக்கும் பாடங்களான் „Natur, Mensch, Gesellschaft (NMG)“, (இயற்கை, மனிதன், சமூகவியல்) வடிவமைத்தல், இசை மற்றும் விளையாட்டுக்கும் அமைந்திருக்கும்.

## பாடங்களின் குறிக்கோள் மற்றும் உள்ளடக்கம்

Ziele und Inhalte des Unterrichts

ஆரம்பபாடசாலைப் பாடங்கள் 21 (Lehrplan 21) க்கு ஏற்றவிதத்தில் அமைந்திருக்கும். பாடத்திட்டங்கள் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்க்கு  பாலர்வகுப்பிலிருந்து 9. வகுப்பு வரை சரியான திசையைக் காட்டுவதாக இருப்பதுடன், இது அவருக்கு பாடங்களைத் திட்டமிட  உதவுகின்றது.

Lehrplan 21 குறித்த மேலதிக விபரங்களை நீங்கள் கீழ்வரும் இணையத்தளத்தில் காணலாம்:  www.erz.be.ch/lehrplan21

## கற்பிக்கும் நபர்கள்
Lehrpersonen

பாலர் பாடசாலை மற்றும் ஆரம்பத் தரத்திற்கு கற்பிக்கும் திறமையை Basisstufe குழு கொண்டிருக்கும். கற்பிக்கும் நபர்கள் பகுதியாக ஆசிரிய குழு எனும் முறையில் வேலை செய்வார்கள், அதாவது ஒரே நேரத்தில் ஒரே வகுப்பில் அவர்கள் கற்பித்துக் கொள்வார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து பாடங்களை அவர்களின் குறிக்கோள், உள்ளடக்கம் மற்றும் தொழில் முறைக்கு அமைவாகத் திட்டமிடுவதுடன் இதை நடைமுறைப்படுத்தி முடிந்ததும் அது குறித்து தமது மதிப்பீட்டை வழங்குவார்கள். அவர்கள் ஒன்றுசேர்ந்து பொறுப்பு வகிப்பதுடன், தெளிவாக தமது செயற்பாட்டுப் பகிர்வுகளை முடிவுசெய்வார்கள். அவர்கள் பிள்ளைகளை வித்தியாசமான விளையாட்டுகள்-, கற்றல்- மற்றும் கற்பிக்கும் விதங்கள் ஊடாக ஊக்குவிப்பதுடன், பலவிதமான விளையாட்டு- மற்றும் கற்கும் கருவிகளை ஏற்பாடுசெய்து கொடுப்பார்கள். தனிப்பட்ட பகுதிகளில் விசேடமான ஊக்குவிப்பு தேவைப்படும் பிள்ளைகளுக்கு, - உதாரணமாக கதைப்பதில் அல்லது இயங்கும் விருத்தியில் - மேலதிகமாக நிபுணத்துவமான நபர்கள் மூலம் உதவி வழங்குவார்கள்.

## 4- தொடக்கம் 8- வயதான பிள்ளைகளுக்கான பாடசாலை ஒழுங்கமைப்பு
Organisationsformen der Schuleingangsstufe

பாலர் பாடசாலை கட்டாயமானது மற்றும் இது மக்கள் பாடசாலையின் ஒரு பகுதி. இது 2 வருடத்துக்கு நடைபெறும்.

4- தொடக்கம் 8- வயதான பிள்ளைகளுக்கு நகர நிர்வாகம் பாலர் பாடசாலை, Basisstufe வகுப்பு அல்லது Cycle élémentaire ஐ ஒழுங்கு செய்து தர முடியும்.

## மக்கள் பாடசாலை குறித்த மேலதிக தகவல்கள்
Weitere Informationen zur Volksschule

பெற்றோருக்கான தகவல், மக்கள் பாடசாலை www.erz.be.ch/elterninfo

பெற்றோருக்கான தகவல், பாலர் பாடசாலை www.erz.be.ch/kindergarten

Bezug: www.erz.be.ch/basisstufe

Bildungs-und Kulturdirektion
Amt für Kindergarten, Volksschule und Beratung
akvb.bkd@be.ch
Auflage 2020
2019.ERZ.1074

முகப்புப்படம் ஒரு சோதித்துப்பார்த்த Basisstufe Köniz-Buchsee வகுப்பால் தயாரிக்கப்பட்டது.